# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
# Tamilnadu Government Employees' Association

பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு. பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலப் பொருளாளர்
**எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா. பன்னீர்செல்வம்**
**சி.ஆர். இராஜகுமார்**
**என். ஜனார்த்தனன்**
**தி. கலைசெல்வி**
**எம். சௌந்தரராஜன்**
**ஏ. பெரியசாமி**


ஊடகச்செய்தி எண்.4/2017 நாள்.03.02.2017

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் மற்றும் பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் வெளியிடும் பத்திரிகை செய்தி

**கோரிக்கைகளை வலியுறுத்தி ஒன்று கூடிய**
**ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் கைது !**
**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கண்டனம் !**

**புதிய பென்சன் திட்டத்தை முற்றாக கைவிட்டு அனைவருக்கும் பயனளிப்பு பென்சன் திட்டம் அமுல்படுத்த வேண்டும், 8வது ஊதியக்குழுவை உடனடியாக அமுல்படுத்த வேண்டும், 20% இடைக்கால நிவாரணம் வழங்க வேண்டும், காலிப்பணியிடங்களை நிரப்பிட வேண்டும், இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடுகளை களையவேண்டும் உள்ளிட்ட 15 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி 03-02-2017 அன்று தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில் மாநில அளவிலான மாபெரும் முற்றுகைப் போராட்டம் தொடக்கக் கல்வி இயக்குநர் அலுவலகம் முன்பு நடத்திட முடிவு செய்திருந்தனர்.**

**இன்று (03-02-2017) தொடக்கக் கல்வி இயக்குநர் அலுவலகம் முன்பு ஜனநாயக முறையில் தனது கோரிக்கைகளை வலியுறுத்தி ஒன்று கூடிய ஆசிரியர்களை தமிழக அரசு அழைத்து பேசி சுமூகத் தீர்வு காண முன்வராமல் காவல்துறையை கொண்டு அவர்களை வழியிலேயே மறித்து கைது செய்துள்ளதை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது. கைது செய்த ஆசிரியர்கள் அனைவரையும் உடனடியாக விடுவித்து, சங்கத் தலைவர்களை அழைத்துப் பேசி கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக்கொள்கிறது.**

**(மு. அன்பரசு)**
பொதுச்செயலாளர்

*பெறுநர்*

*ஆசிரியர்,*
**அனைத்து ஊடகங்கள்**